## ரூ.342.60 கோடி மதிப்பீட்டில்

# கோவளம் உபவடிநிலப் பகுதியில் "மாமல்லன்" புதிய குடிநீர் நீர்த்தேக்கம் அமைக்கும் பணி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஜன. 20 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.01.2026) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் கோவளம் உபவடிநிலப் பகுதியில் 5161 ஏக்கர் பரப்பளவில் 342 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர் நீர்த்தேக்கத்திற்கு "மாமல்லன்" என்று பெயர் சூட்டி, நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

**கோவளம் உபவடிநிலப் பகுதியில் "மாமல்லன்" புதிய குடிநீர் நீர்த்தேக்கம் அமைக்கும் பணி**

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தையூர், மானமதி, சிறுதாவூர், காளவாக்கம், ஆமூர், பையனூர் உள்ளிட்ட 69 ஏரிகளின் உபரி நீர், உப்பளம் மற்றும் அரசுக்குச் சொந்தமான காலி நிலம் வழியாக பக்கிங்காம் கால்வாயில் வெளியேற்றப்பட்டு, இறுதியாக முட்டுக்காடு, கோகிலமேடு முகத்துவாரங்களில் கடலில் கலக்கிறது.

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தை அதிகரிக்கவும், நீர் வழங்கலை பரவலாக்கவும், 2025-2026 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இப்புதிய நீர்த்தேக்கமானது சென்னை வடிநிலப்பகுதியில் உள்ள கோவளம் உபவடிநிலப் பகுதியில் அமையவுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையே உள்ள 3010 ஏக்கர் உப்பளப் பகுதி உட்பட மொத்தம் 5161 ஏக்கர் அரசு நிலங்களில் அமைக்கப்படவுள்ளது.

தற்போது அப்பகுதியில் முட்டுக்காடு பகுதியிலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவிற்கு மட்டுமே பக்கிங்காம் கால்வாய் வழியாக உயர்ந்த அலையின் (High Tide) பொழுது கடல்நீர் உள்ளே வருகிறது. இவ்வாறாகவே கோகிலமேடு முகத்துவாரத்திலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவிற்கு மட்டுமே பக்கிங்காம் கால்வாய் வழியாக உயர்ந்த அலையின் (High Tide) பொழுது பக்கிங்காம் கால்வாய் வழியாக கடல்நீர் உள்ளே வருகிறது. இதற்கு இடைப்பட்ட பகுதியில் பக்கிங்காம் கால்வாய் தூர்ந்து கடல்நீர் உள்வருவதில்லை. மேலும் மழைக்காலங்களில் இப்பகுதி முழுவதும் மழை நீர் மட்டுமே தேங்கி அதன்பின் கடலில் மெதுவாக கலக்கிறது.

புதிய நீர்த்தேக்கம் அமைப்பதற்கு 34 கி.மீ. நீளத்திற்கு மண் கரை அமைக்கும் பணி, கோகிலமேடு முகத்துவாரத்திற்கு வெள்ள நீர் செல்வதற்கு ஏதுவாக நீர் தேக்கத்தின் தெற்கு பகுதியில் நீரொழிங்கி அமைத்தல், நீர் உள்வாங்குவதற்கும் மழைநீரை வெளியேற்றுவதற்கும் தேவையான நீரொழிங்கிகள் அமைத்தல், தேவைக்கு அதிகமான வெள்ள நீரினை மேற்கு மற்றும் கிழக்குப் புற வெளிப்புற வடிகால்கள் மூலம் முட்டுக்காடு மற்றும் கோகிலமேடு முகத்துவாரங்கள் மூலம் வெளியேற்ற வடிகால்கள் அமைக்கும் பணிகள் அமையவுள்ளன. மேலும், பக்கிங்காம் கால்வாய் திருவிடந்தையிலிருந்து மகாபலிபுரம் வரை முற்றிலுமாக சீரமைத்து கடல்நீர் வருவதற்கேற்ப புனரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இந்த திட்டத்தின் வாயிலாக நாள் ஒன்றுக்கு 170 மில்லியன் லிட்டர் குடிநீரை மக்களுக்கு வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், சோழிங்கநல்லூர், மேடவாக்கம், பள்ளிக்கரணை, சிறுசேரி, கேளம்பாக்கம், திருப்போரூர், மாமல்லபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 13 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.**

**நீர் பாதுகாப்பு விருதுகள்!**

மாமல்லன் நீர்த் தேக்க அடிக்கல் நாட்டு விழாவில், மாநிலம் முழுவதும் நீர்நிலைகளை புனரமைத்து பாதுகாத்து சிறப்பான முறையில் செயலாற்றிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களான (NGO) சிறு துளி, இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை, எக்ஸ்னோரா சர்வதேச அறக்கட்டளை, எச்.சி.எல். அறக்கட்டளை, தன் அறக்கட்டளை, மெகா அறக்கட்டளை, ரோப் நிறுவனங்கள், டி.வி.எஸ். சீனிவாசன் அறக்கட்டளை, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதார பிரிவு, அண்ணா பல்கலைக் கழகம் நீர்வள ஆதார மையம். பிரதான் அறக்கட்டளை, வனத்துக்குள் திருப்பூர், கோவை குளங்கள், பயோட்டா மண் அறக்கட்டளை, தர்மபுரி ஆதி அறக்கட்டளை ஆகிய அரசு மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று சிறந்த நீர் பாதுகாத்தல் விருதுகளை (Best Water Conservation Award) வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் க.செல்வம், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, செங்கல்பட்டு சார் ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன், நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் கோபாலகிருஷ்ணன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் பொதுப்பணி திலகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.1.2026) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் கோவளம் உபவடிநிலப் பகுதியில் 5161 ஏக்கர் பரப்பளவில் 342 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் "மாமல்லன்" புதிய குடிநீர்த்தேக்கம் அமைக்கும் பணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் க.செல்வம், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் 84 புதிய நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

***சென்னை, ஜன. 20 -***

***சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா நிறைவு விழாவில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் பொது நூலகத் துறையின் மூலமாக 84 நூல்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.***

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.01.2026) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2026 இன், நிறைவு விழாவில் தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியம் மூலமாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் 44 நூல்கள் மற்றும் பொது நூலகத் துறையின் 40 நூல்கள் என மொத்தம் 84 நூல்களை வெளியிட்டார்.

தமிழ்நாட்டின் பண்பாட்டு அடையாளங்களை உலகளாவிய மேடையில் முன்னிறுத்தும் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா ஜனவரி 16 முதல் 18 வரை கலைவாணர் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

'நாகரிகங்களுக்கு இடையேயான ஒரு உரையாடல்' (*A Conversation between Civilisations*) என்ற உயரிய நோக்கத்தோடு கொண்டாடப்படும் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா, குறுகிய காலத்திலேயே உலகளாவிய அளவில் முக்கியத்துவம் பெற்ற இலக்கிய மேடையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

**மொழிபெயர்ப்பு மானியம்!**

சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2023 ஆம் ஆண்டில், 24 நாடுகள் பங்கேற்று 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டது, 2024 ஆம் ஆண்டில், 40 நாடுகள் பங்கேற்று 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டது, 2025 ஆம் ஆண்டில், 64 நாடுகள் பங்கேற்று 1354 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதுடன், சுமார் 135 தமிழ் எழுத்தாளர்களின் 260 நூல்கள், முப்பதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் நிறைவு நாள் நிகழ்வில், தமிழ் மொழியின் தனித்துவமும் சிறப்பும் உலகளாவிய அளவில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் அளவில் தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு, சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட உலக நாடுகள், இப்புத்தகத் திருவிழாவில் பங்கேற்றுள்ளனர். இப்பன்னாட்டுப் புத்தகத் திருவிழா, மாநில மற்றும் சர்வதேச பதிப்பாளர்களுக்கான ஒரு முக்கியமான உரிமை வர்த்தகத் தளமாக B2B (*Business to Business*) அமைந்துள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் வெளியீட்டு பிரிவு, கடந்த 8 ஆண்டுகளில் தமிழின் நூற்றுக்கும் மேற்பட்ட ஆகச்சிறந்த இலக்கியங்களை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது. இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள் இந்த ஆண்டு மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**பிறமொழி நூல்களின் உரிமை!**

கடந்த இரண்டு ஆண்டுகளாக, பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் இலக்கிய முகவர்களின் பங்கு இன்றியமையாததாக மாறியுள்ளது. இந்நிலையில், இந்த ஆண்டு 110 பதிப்பகங்கள் வெளியிட்டுள்ள 187 எழுத்தாளர்களின் 350 நூல்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த 26 இலக்கிய முகவர்கள், பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் பங்கேற்ற நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த பதிப்பாளர்கள், பன்னாட்டு இலக்கிய முகவர்கள் மற்றும் காப்புரிமை மேலாளர்களுடன் தமிழ் நூல்களின் உரிமையை பிற மொழிகளுக்கும், பிற மொழி நூல்களின் உரிமையை தமிழுக்கும் பரிமாறிக்கொள்ளும் நிகழ்வுகள் நடைபெற்றன. மேலும், இந்நிகழ்வில் 1800க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

**சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2026-ன் சிறப்பம்சங்கள்:**

தமிழ்நாடு பதிப்பாளர்களுக்கான பிரான்ஸ் அரசின் சிறப்பு அமர்வுகள், TEDA Türkiye என்ற துருக்கிய அரசின் மானியம் பற்றிய கருத்தரங்கு, போலோனியா குழந்தை புத்தகக் கண்காட்சியின் ஓவிய வடிவமைப்பு, கருத்துப்படம் மற்றும் மொழிபெயர்ப்பு அமர்வுகள் நடைபெற்றன. உலகப் புகழ் பெற்ற இலக்கிய ஆளுமைகள் முதல் நம் நாட்டின் சிறந்த எழுத்து ஆளுமைகள் வரை பங்கு பெற்ற இந்த 17 அமர்வுகளில் பொதுமக்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.

இவ்வாண்டு, தமிழ்நாடு அரசின் சென்னைப் புத்தகப் பூங்கா உள்ளிட்ட 20 தமிழ் பதிப்பாளர்களின் அரங்கங்கள் இப்புத்தகத் திருவிழாவில் இடம் பெற்றதோடு, அதன் வாயிலாக கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் புத்தகங்களை வாங்கிச் செல்லும் வசதியும் ஏற்படுத்தப்பட்டது.

மேலும், தமிழ்நாடு அரசு சார்பில் உலகின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய புத்தகக் கண்காட்சியாக விளங்கும் பிராங்க்பர்ட் புத்தகக் கண்காட்சியின் (*Frankfurt Book Fair*) ஒருங்கிணைப்பாளர்களை மதிப்புறு விருந்தினராக (*Guest of Honour*) வரவேற்று சிறப்பிக்கப்பட்டது. இது சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் சர்வதேச முக்கியத்துவத்தை மேலும் உயர்த்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாக அமைந்தது.

சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 150க்கும் அதிகமான பதிப்புத் துறை சார்ந்த நிபுணர்கள் பங்கேற்று, உலகளாவிய பதிப்புத் துறையின் தற்போதைய பதிப்புத் துறையின் போக்குகள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் குறித்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர். மொத்தம் 17 கருத்தரங்குகள் / கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இந்த ஆண்டு, முதல் முறையாக இக்கருத்தரங்குகளில் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நிறைவு விழா நிகழ்ச்சி**

சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2026 இன், நிறைவு விழாவில் தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியம் மூலமாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் 44 நூல்கள் மற்றும் பொது நூலகத் துறையின் 40 நூல்கள் என மொத்தம் 84 நூல்களை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், உலகளாவிய பதிப்பு சந்தை நிலவரங்கள், பண்பாடு, கலாச்சாரம் மற்றும் இலக்கிய பரிமாற்றங்கள், உலகளாவிய புத்தகத் திருவிழாக்களில் தமிழ் பதிப்பாளர்களின் பங்கேற்பு ஆகியவற்றில் தொடர் பங்கேற்பினை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு அரசிற்கும், துருக்கி, மலேசியா, தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர், தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியங்கள் பட்டியலை (*Tamil Nadu Translation Grants Catalogue*) முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

தமிழ்நாட்டின் பண்பாட்டு அடையாளங்களை உலகளாவிய மேடையில் முன்னிறுத்தும் வகையில் தமிழ் மொழியில் இருந்து பிற மொழிகளுக்கு மொழிபெயரப்பு செய்திட தமிழ்நாடு அரசு கடந்த மூன்று வருடங்களாக மொழிபெயர்ப்பு மானியத்தினை தொடர்ந்து வழங்கி வருகிறது.

சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2026-ல், 102 நாடுகளுடன் 1830க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ் மொழியிலிருந்து பிற மொழிகளுக்கு 1273 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு 260 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், பிற மொழிகளுக்கு இடையே 297 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்நாடு, 'தமிழை உலகுக்கும், உலகைத் தமிழுக்கும்', இந்திய மொழிகளை உலக மொழிகளுக்கும் கொண்டு செல்லும் மிக உயரிய இலக்கிய பரிமாற்ற தளமாக உலகளவில் உயர்ந்து நிற்கிறது.

இந்நிகழ்வு ஒரு இலக்கிய பரிமாற்றம் மட்டுமல்லாது, உலக 'நாகரிகங்களுக்கு இடையிலான ஒரு உரையாடல்' எனும் உயரிய நோக்கத்தினை நிறைவு செய்துள்ளது.

**இலக்கியப் பரிமாற்றம்!**

இவ்விழாவில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், புக்கர் பரிசு விருதாளர் திருமதி. பானு முஸ்தாக், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் துணைத் தலைவர் இமயம், சென்னை மாநகர நூலக ஆணையக் குழு தலைவர் கவிஞர் மனுஷ்யபுத்திரன், கவிப்பேரரசு வைரமுத்து, பள்ளிக்கல்வித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் பி. சந்தர மோகன், பொது நூலகத் துறை இயக்குநர் திருமதி எஸ். ஜெயந்தி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மருத்துவர் எம்.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், பன்னாட்டு மற்றும் தமிழ்நாட்டுப் புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.